**<u>DEPOSITION OF WITNESS</u>**
**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **40**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜாகிர்உசேன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

| |
|---|
| A1, A2, A6, A8,A11, A15, A17, A20, A23 present. Others absent. Petition U/s 317 filed and allowed. |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 30.03.2023**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தென்காசியில் மரைக்காயர் பள்ளிவாசல் தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். தென்காசி கூலக்கடை பஜாரில் கன்னிமாரம்மன் கோவில் தெருவில் ஷாப் கடை வைத்துள்ளேன். நான் பொதுவாக காலை 10.30 மணிக்கு கடையை திறந்து இரவு 10.30 மணிக்கு கடையை அடைப்பேன். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் 12007 ம் ஆண்டு நான் வழக்கமாக கடையை திறக்கும்போது நான் வந்தபோது இருதரப்பினருக்கும் இடையே தகராறு என்று சொன்னார்கள் நான் கடையை திறக்காமல் வீட்டிற்கு போய் விட்டேன். பின்னர் 3 நாட்களுக்கு பின்னர் கடையை திறந்தேன். சண்டையில் இருதரப்பிலும் கொலை ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் 14.08.2007 ம் தேதி வழக்கம்போல் காலை 9.30 மணிக்கு வியாபாரத்தை கவனித்துக்கொண்டிருந்தபோது 10.15 மணிக்கு என் கடைக்கு வடபுறம் கிழக்கு பார்த்து செல்லும் ரோட்டில் மேல முத்தாரம்மன் கோவில் அருகில் இந்து முஸ்ஸீம் இருபிரிவினருக்கும் கலகம் ஏற்பட்டது என்றும் சப்தம் கேட்டு நான் கடையை வேகவேகமாக அடைத்து விட்டு வீட்டுக்கு போய்விட்டேன் என்றும் இருபிரிவினரும் அருவாள், கத்தி, இரும்பு பட்டையுடன் இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டதால் ஒரு சிலர் இறந்துவிட்டதாகவும், ஒரு சிலருக்கு காயங்கள் ஏற்பட்டதாகவும் கேள்விப்பட்டேன் என்றும் இது சம்பந்தமாக சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது மேற்சொன்ன சம்பவங்களை சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரியும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சக்திபாண்டியன் வகையறா மீதான வழக்கிலும் சாட்சியாக விசாரிக்கப்பட்டேன் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று தான் சொன்னேன். எங்கள் ஊரில் தொழுகைப்பள்ளிகட்டுவது சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கும் இந்து முன்னனி அமைப்பை சேர்ந்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட ரகசிய

உடன்படிக்கையின் அடிப்படையில் நான் பிறழ்சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**